**தலைப்பு 285–விவசாயத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

விவசாயத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாயத்திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 24 ஆந்திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விவசாயத்திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ளஅபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ)உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்

செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஏசீஏ – 6 மாதிரியின் பிரகாரம் மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 26,383,858,018 ஆக இருந்த போதும் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் விடயங்களிலும் அதற்குரிய ஒதுக்க மீதி ரூபா 24,525,447,790 ஆக இருந்தமையால் ரூபா 1,858,410,228 ஆன சீராக்கங்களுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கோவையில் ஏற்பட்ட தவறு காரணமாக 2020 திசெம்பர் 31 இல் சீராக்கம் செய்வதற்கு முன்னர் காணப்பட்ட மீதி 2021 சனவரி 01 ஆந் திகதி ஆரம்ப மீதியாக குறிப்பிடப் பட்டிருந்ததுடன் சீராக்கம் செய்யப்பட்ட பெறுமதியுடன் நிதிக் கூற்றுக்கள் (ACA-6) படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மீதிகளை சரியாக முன்கொண்டுவருவ தற்கும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதற்கான சீராக்கங்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 24,525,447,790 ஆக இருந்த போதும் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களின் SA82 படிவத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் சனவரி 1 இல் உள்ளவாறு மீதி ரூபா 24,528,396,296 ஆக இருந்தமையால் ரூபா 2,948,506 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | அம்மீதியை சீராக்குவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது மாற்றல் பத்திரமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அவ்வேறுபாடு சீராக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மீதிகளை சரியாக முன் கொண்டுவருவதற்கும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதற்கான சீராக்கங்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பாக கூற்று ஏசீஏ -6 படிவத்தின் பிரகாரம் மற்றும் SA82 படிவத்தின் பிரகாரம் வேறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விடயங்களுக்குரிய ஒவ்வொரு மீதிகளில் வேறுபாடு காணப்பட்டது. | கோவையில் ஏற்பட்ட தவறு காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீராக்கம் செய்வதற்கு முன்னர் காணப்பட்ட மீதிகள் 2021 சனவரி 01 ஆந் திகதி ஆரம்ப மீதியாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் சீராக்கம் செய்யப்பட்ட பெறுமதியுடன் நிதிக் கூற்றுக்கள் (ACA-6) படிவம இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களுடன் பரீட்சித்து சீராக்கப்பட வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு போக்குவரத்து உபகரணங்கள் மீதி ரூபா 1,439,705,,548 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று ஏசீஏ -6 மாதிரி படிவத்தின் பிரகாரம் அம்மீதி ரூபா 1,192,187,538 ஆக இருந்தமையால் போக்குவரத்து உபகரண மீதி ரூபா 247,518,010 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே திணைக்களத்திற்குரிய 184 வாகனங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | காணப்படும் வேறுபாடு ஆரம்ப மீதிகளின் கீழ் கணனி நிகழ்ச்சிக்கு இவ்வாண்டின் யூன் 30 இல் உள்ளவாறு கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. பெறுமதி இனங்காணப்படாத 184 வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு CIGAS கணனி நிகழ்ச்சிக்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிடங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வேலை மீதி ரூபா 6,491,554,,294 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று, ஏசீஏ -6 மாதிரி படிவத்தின் பிரகாரம் அம்மீதி ரூபா 1,908,156,606 ஆக இருந்தமையால் கட்டிடங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வேலை மீதி ரூபா 4,583,397,688 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே திணைக்களத்திற்குரிய 148 கட்டிடங்கள் மதிப்பீடு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் 1388 கட்டிடங்களுக்குரிய பெறுமதியை இனங்காண்பதற்காக மதிப்பீடு செய்யயப்பட்டிருக்கவில்லை. | சில உப அலகுகள் மூலம் தகவல்கள் அனுப்பும் போது பெறுமதி உள்ளடக்கப்படாமல் அத்தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டமையால் CIGAS கணனி நிகழ்ச்சியின் பெறுமதியில் கூடிய பெறுமதி காண்பிக்கப்படுகின்றது. மேலும் மதிப்பீடு செய்வதற்கு உள்ள ஏனைய சொத்துக்களை மதப்பீடு செய்வதற்கும் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (vi) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவினால் காணி மீதிக்குரிய பெறுமதி சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று, ஏசீஏ -6 மாதிரி படிவத்தின் பிரகாரம் அம் மீதி ரூபா 17,813,491,318 ஆக இருந்தது. மேலும் 517 காணி பிரிவுகளுக்குரிய பெறுமதி கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் 103 காணி பெறுமதிக்குரிய நில அளவும் இனங்காணப்பட்டு பெறுமதி கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யயப்பட்டிருக்கவில்லை. | காணி தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக புதிய படிவமொன்று இனங் காணப்பட்டிருப்பதால் அத்தகவல்களை உப பிரிவுகளிடமிருந்து பெற்றுக் கொள்ளல் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருவதுடன் அத்தகவல்களை பூர்த்தி செய்து உடனடியாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களை இனங் காண்பதற்கும் மற்றும் அச்சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (vii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தளபாடங்கள் உட்பட ஏனைய உபகரணங்கள் மீதி ரூபா 2,410,236,758 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று, ஏசீஏ -6 படிவத்தின் பிரகாரம் அம்மீதி ரூபா 995,223,344 ஆக இருந்தமையால் தளபாடங்கள் உட்பட ஏனைய உபகரணங்கள் மீதி ரூபா 1,415,013,414 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நன்கொடையாக கிடைத்த சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யயப்பட்டிருக்க வில்லை. | கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பத்தில் ஆரம்ப மீதிகளாக ரூபா 5,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடன் கூடிய சொத்துக்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டதுடன் அனைத்து உப பிரிவுகளில் காணப்பட்ட மொத்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் உள்ளடக்கப்படாமையால் கணனி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் சொத்துக்கள் பதிவேட்டில் தற்போது காணப்படும் சொத்துக்களை இனங் காண்பதில் நடைமுறை சிக்கல்கள் காணப்பட்டன. எனினும் முடியுமான வகையில் கணனி நிகழ்ச்சித்திட்டத்திலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் காணப்படும் வேறுபாடுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவினங்களுக்குரிய காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 6,055,095,662 ஆக இருந்த போதும் அது தொழிற்பாட்டு செயற்பாடுகளினால் உருவாகிய காசின் கீழ் ரூபா 4,641,593,129 என காண்பிக்கப்பட்டமையால் காசு வெளிப் பாய்ச்சல் ரூபா 1,413,502,533ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளின் காசுப் பாய்சச்ல் கூற்றினைத் தயாரிக்கும் போது தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் 1001 முதல் 1102 வரையான செலவின விடயங்களின் செலவினங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததால் 2021 இன் காசுப் பாய்ச்சல் கூற்றும் அதனையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது. உங்களால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட தகவல்களை அடுத்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | தொழிற்பாட்டு செயற்பாடுகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ii) | பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளைக் கையேற்றல் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசின் அளவு ரூபா 111,606,276 ஆக இருந்த போதும் அது ரூபா 1,525,108,809 என ரூபா 1,413,502,533 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட தகவல்களை அடுத்த நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | முதலீட்டுச் செயற்பாடுகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**(இ) முற்பணக் கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முற்பணக் கணக்கு தொடர்பான கூற்று ACA5 படிவத்தின் பிரகாரம் பண்ணை பராமரிப்பு மற்றும் விதை விற்பனை முற்பணக் கணக்கில் 2021 ஆம் ஆண்டில் வரவு வைத்தல் மற்றும் செலவு வைத்தல் முறையே ரூபா 801,737,314 மற்றும் ரூபா 935,890,785 என காண்பிக்கப்பட வேண்டிய போதும் அப்படிவத்தில் அப்பெறுமதிகள் ரூபா 198,325,389 மற்றும் ரூபா 184,302,639 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சீராக்கம் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | திறைசேரி அச்சுக் குறிப்புக்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களுக்குரிய பதிவுகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

**(ஈ) வர்த்தக முற்பணக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | முற்பண செயற்பாடுகளுக்கு பங்பகளிப்புச் செய்யும் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் 5 உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்கள் என்பவற்றிற்குரிய ரூபா 60,132,527 ஆன களஞ்சியங்கள் பண்ணை செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்த போதும் அக்கட்டிடங்களுக்குரிய பெறுமதி மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்படவில்லை. | முற்பணக் கணக்கிற்குரிய உரித்தாக்க வேண்டிய அனைத்து சொத்துக்களை இனங்கண்டு பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் சரியாகஇனங்கண்டு மதிப்பீடு பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டும். |
| (ii) | பள்ளேவெஹெர பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தின் மீயளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 353,304 ஆன பாவனை நெல் இருப்பு இறுதி முடிவுப்பொருள் இருப்பிற்கு உள்ளடக்காமையால் வியாபாரக் கணக்கின் இலாபம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இருப்பு பெறுமதியை சரியாகஇனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) | ஹொரண பழவகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் மீளாய்வாண்டில் இருப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நடுகைப் பொருட்களின் பெறுமதி ரூபா 148,318 என கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,107,318 எனக் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் நடுகைப் பொருட்கள் இருப்பின் பெறுமதி மற்றும் மொத்த இலாபம் 959,000 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இருப்பு பெறுமதியை சரியாகஇனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iv) | உள்நாட்டு உருளை விதைகள் மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,539,738 ஆன 09 சொத்து விடயங்களுக்குரிய பண்ணை / பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகங்களின் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக அதற்குரிய சொத்துக்களின் பெறுமானத்தேய்வும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,539,738 ஆன 09 பொருட்களுக்குரிய பெறுமதி அந்தந்த பண்ணைகளின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (v) | பண்ணைகள் அபிவிருத்தியின் கீழ் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்தம் ரூபா 8,502,400 ஆன 06 சொத்து விடயங்கள் பண்ணைகளின் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக ஆண்டிற்குரிய இயந்திர பெறுமானத்தேய்வு மீதி ரூபா 212,560 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இச்சொத்துக்கள் தற்போது நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (vi) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,630,538 ஆன அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்படாதிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் அந்தளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய பற்றுச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள், செலவினங் களுக்காக அங்கீகாரம் தாமதம் காரணமாக குறித்துரைக்கப்பட்ட செலவினங்களை உறுதிப் படுத்துவதற்கு முடியாமையால் இவ்வாறான முரண்கள் உருவாகியுள்ளதுடன் எதிர்காலங்களில் குறைபாடுகள் இடம்பெறாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மற்றும் ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அட்டுறு செலவினம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (vii) | முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் 1.6.1 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த கந்தபொல விதை உருளைக் கிழங்கு களஞ்சியத்தில் உர மூலப் பொருள் இருப்பின் பெறுமதி ரூபா 1,760,000 தொகை மற்றும் சீதாஎலிய விதை உருளைக் கிழங்கு களஞ்சியத்தில் முடிவுப்பொருள் இருப்பு ரூபா 7,606,473 தொகையையும் குறைத்து கணக்கீடு செய்ததை சீராக்கும் போது தவறாக ஆரம்ப மூலப்பொருள் இருப்பின் பெறுமதிக்கு ரூபா 7,606,473 என ரூபா 5,846,473 கூடுதலாகவும் ஆரம்ப முடிவுப்பொருள் இருப்பின் பெறுமதிக்கு ரூபா 1,760,000 என ரூபா 5,846,473 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இதன் தாக்கம் நிதிப்பிரமாணம் 515 இன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இருப்புகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (viii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பொலன்னருவ விதை பண்ணையின் கடன்பட்டோர் மீதி ரூபா 5,311,803 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டேர் மீதி அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது | தவறாக முற்பணக் கணக்கின் மீதிக்கு ஒப்பந்த விதை உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை விற்பனை செய்த மீதிகளும் கூட்டப்பட்டுள்ளதால் கடன்பட்டோர் மீதி ரூபா 5,311,803 குறைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன்பட்டோர் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திணைக்கள புனரமைப்பு மற்றும் மூலதன செலவினத்திற்காக நிகழ்ச்சித் திட்டம் 01 மற்றும் 02 இன் கீழ் ரூபா 7,220,490,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் அதில் ரூபா 984,145,341 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் 13.63 சதவீதமாக இருந்தது. அவ்வாறே சேமிப்புக்களிலிருந்து 61 சதவீதம் மூலதன செலவினங்களின் சேமிப்புகளாக இருந்ததுடன் அது ரூபா 597,248,492 அதாவது தேறிய மூலதன நிதிஏற்பாட்டில் 28 சதவீதமாக இருந்தது. | கொரோனா தொற்று நிலைமையால் நாட்டில் காணப்பட்ட ஸ்திரமற்ற நிலைமை காரணாக செயற்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. | மீளாய்வாண்டில் ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாட்டை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சிறிய அளவிலான விவசாய செயற்திட்டத்திற்காக ரூபா 1,000,000 மற்றும் முன்னைய ஆண்டில் ரூபா 3,000,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அந்நிதிஏற்பாடு முமையாக சேமிக்கப்பட்டிருந்த காரணத்தினால் செயற்திட்டத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்குரிய செயற்திட்டங்களின் அனைத்து செலவினங்களும் JICA செயற்திட்ட அலுவலகத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இந்நிதிஏற்பாட்டின் கீழ் செலவினங்களை மேற்கொள்வதற்கு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாட்டை குறித்த செயற்பாட்டிற்காக செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் செலவினப் பொழிப்பு ACA(II) படிவத்தின் பிரகாரம் ஒவ்வொரு செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டின் சேமிப்பு 5சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டியபோதிலும் திணைக்களத்தின் 81 செலவு விடயங்களின் தேறிய நிதி ஏற்பாடான ரூபா 3,868,116,234 தொகையில் ரூபா 877,810,325 அதாவது 23 சதவீதம் சேமிப்பாக இருந்தது. அச்சேமிப்பு ஒவ்வொரு செலவின விடயங்களில் 7 சதவீதம் முதல் 96 சதவீதத்திற்கு இடைப்பட்டிருந்தது | கொரோனா தொற்று நிலைமையால் நாட்டில் காணப்பட்ட அவ்வப்போது அலுவலகம் மூடப்பட்டதாலும் மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்கள் கடமை புரிந்தமையாலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரயாணங்கள் வரையறுக்கப்பட்டமையாலும் பராமரிப்பு நடவடிக்கைகளின் செலவினம் குறைவடைந்தமை போன்ற காரணங்களின் பேரில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. | நிதிஏற்பாடு உச்ச அளவில் பயன்படுத்தப்பட வேண்டும் |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்பு சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 33 ஆம் இலக்க பீடைகொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 21(4) (அ) பிரிவு | | பீடைகொல்லிகள் பதிவாளர் அலுவலகத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 23 ஆந் திகதி வரையிலும் 232 பீடைகொல்லி விற்பனை நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கி இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் அரசினால் பீடை கொல்லிகள் இறக்குமதி நிறுத்தப்பட்டதால் பீடைகொல்லி இருப்பு இல்லாத விற்பனையாளர்கள் பதிவுக்காக விண்ணப்பிக்கவில்லை யென அறிவிக்கப்பட்டிருந்தது | உரிய காலப்பகுதியில் அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 6.1 உப பிரிவு | | எதேனும் பதவியொன்றுக்கு ஒதுக்கப்பட்ட வீடொன்று தவிர ஏனைய அனைத்து வீடுகளின் குத்தகை காலம் 05 ஆண்டுகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தெரிவு பரிசோதனையின் போது 02 நிறுவனங்களின் 17 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகள் கடந்து 02 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான காலமாக அரச வீடுகளில் தொடர்ச்சியாக குடியிருந்தனர். | சில உத்தியோகத்தர்களின் சேவை அவசியம் காரணமாக குத்தகை காலம் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு நீங்கிச் செல்லுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. குத்தகை காலத்தை மிகைத்து குடியிருக்கும் காலப்பகுதிக்கு தண்டக்கூலி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டுக் கோவையின் I ஆவது தொகுதியின் XVIII ஆம் அத்தியாயத்தின் 193 ஆம் விதியின் ஏற்பாடுகள். | | 09 நிறுவனங் களுக்குரிய 237 உத்தியோகத்தர்கள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஒரே நிறுவனத்தில் சேவை புரிந்து வந்ததனர். | இடமாற்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு இடமாற்றம் செய்வதற்கும் சில உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலத்துடன் கூடிய உத்தியோகத்தர்களின் பதிவேட்டில் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது | செயற்பாட்டுக் கோவையின் சட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | திணைக்களத்தின் 13 பணிப்பாளர் பிரிவுகளுக்குரிய ஓட்டத்தில் உள்ள 215 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2015 ஏப்ரல் 24 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 2,440,247 | ஓய்வூதியம் பெறும் திகதியிலே ஓய்வூதிய நலன்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ஓய்வுபெற்ற 33 ஊழியர்களின் தனிப்பட்ட கோவைகளின் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்யாமை காரணமாக கடன் மீதிகளை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு முடியாமல் காணப்பட்டன. | 33 ஊழியர்களின் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது, | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 முற்பணங்களை வழங்குதலும் தீர்வுசெய்தலும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொடுக்கள் வாங்கல்களை முடிவுறுத்தும் 5 முற்பண கணக்குகளுக்குரிய 18 ஆண்டுகளுக்கும் 29 ஆண்டுக ளுக்கும் மேற்பட்ட அனுமதிக்கப்படாத செயற்பாடு கலைத்தல் கணக்கிற்குரிய நட்டத் தொகையின் கூட்டுத்தொகை ரூபா 67,146,096 ஆக இருந்தது. | இவ்விடயம் அரசாங்க கணக்குகள் குழுவில் கலந்துரையாடியதன் பின்னர் தேவையான அடுத்த நடவடிக்கைளை எடுத்து கலைப்புக் கணக்கினை முழுமையாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 518 ஏற்பாடுகளின் பிரகாரம் கலைப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | விடய இலக்கம் 285-05 உடைய உறுதிப்படுத்திய முற்பண கணக்கிற்குறிய விதை மற்றும் நடுகைப் பொருட்கள் முற்பண கணக்கிற்குரிய 29 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த ரூபா 76,157 தொகை தீர்க்கப்பட வேண்டியிருந்தது. | இந்த முற்பணக் கணக்கு முழுமையாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 518 ஏற்பாடுகளின் பிரகாரம் கலைப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

**2.4 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07வைப்புக் கணக்குகளுக்குரிய 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 4,495,882 கூட்டுத்தொகை தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெளியார் கணக்காய்வு நிறுவனமொன்றுக்கும் மற்றும் கட்டட நிர்மாண நிறுவனமொன்றுக்கும் செலுத்த வேண்டிய தொகையானது பிடிகாசாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்குரிய கன்னொருவ குளத்தை புனரமைப்பதற்காக ஏனைய மூலதன செலவின விடயம் 285-2-2-7-2507 இன் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 1,000,000 ஆன நிதி ஏற்பாடு | கன்னோருவ குளத்தை புனரமைப்பதற்காக 285-2-2-7-2507 ஆன செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 1,000,000 ஆன நிதி ஏற்பாடு | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை செயற்திறனாகவு |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் குறித்த நிதியை எதற்காக பயன்படுத்துவது என்பது தொடர்பான செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட திட்டமொன்று தயாரிக்கப்பட்டோ அல்லது புனரமைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | ம் ஆக்கபூர்வமாக வும் பயன்படுத்த வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை அடைந்து கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரஹங்கல விதை உற்பத்தி பண்ணையின் அடிப்படை மற்றும் நியம விதை உற்பத்தி தொடர்பாக கடந்த 7 போகங்களில் எதிர்பார்த்த இலக்கு போஞ்சி, தக்காளி மற்றும் முள்ளங்கி என்பவற்றின் மொத்தம் 12390 கிலோகிராமாக இருந்ததுடன் அதற்காக ரூபா 11,518,086 ஆன கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் உள்ளவாறு ஆரம்ப விதை உற்பத்தி 4654 கிலோகிராம்களாக இருந்ததுடன் அது எதிர்பார்த்த இலக்கில் 37 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | காணப்பட்ட வரண்ட காலநிலை நிலைமை, நட்டவுடன் இறக்கும் நோய் நிலைமை, அதிக காலம் களஞ்சியத்தில் வைத்திருந்தமை தரமானதால் குறைந்த விதைகள் நடப்பட்டதால் இச்செய்கை மிகவும் பலவீனமான செய்கையாக இருப்பதால் அச்செய்கையிலிருந்து கிடைக்கும் விளைச்சலும் மிகவும் குறைவாக இருந்தது. எதிர்பார்த்த மழைவீழ்ச்சி கிடைக்காமையால் சில செய்கைகள் மேற்கொள்ளப் படாமல் விதைகள் மீண்டும் திருப்பி அனுப்பிய சந்தர்ப்பங்களும் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

## 3.3 எதிர்பார்த்த நலன்களைப் பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாயத் திணைக்களத்தின் கீழ் தேசிய நிறுவனங்கள், கமநல சேவை செயற்பாட்டுக் குழுக்களுடன் இணைப்பை மேற்கொள்ளும் போது அதற்குரிய கணனிமயப்படுத்தும் செயற்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு இரண்டாம் மட்ட தகவல் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர் 50 பேர் ஆட்சேர்ப்பு செய்யும் பொருட்டு தேவையான அங்கீகாரத்தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெற்று 23 உத்தியோ கத்தர்கள் ஆட்சேர்ப்பு | இச்செயற்பாட்டின் பொறுப்பு விவசாய அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இணைப்பொன்று மேற்கொள்ளப்படாமையால் ஆட்சேர்ப்பு தகவல்கள், இருபத்தி மூன்று தொழில்நுட்ப உதவியாளர்கள் திணைக்களத்தின் வெவ்வேறு நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் பிரகாரம் இணைப்புச் | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஊழியர்களை செயற்திறனாக ஈடுபடுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தனர். பதவியணியினரை இணைத்துக கொள்ளல், கட்டிட நிர்மாணம் போன்றன தொடர்பில் இணையத் தளப்படுத்த ஆரம்பிப்பதற்கு தேவையான அடிப்படை காரணிகள் வழங்கப்பட்டிருந்தும் இணையத்தளப்படுத்தும் நடவடிக்கை திட்டமிடப்பட்டபடி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்டுள்ளனர். | |
| (ஆ) | விவசாய உற்பத்திகளை தயாரிக்கும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல் மற்றும் பிரசித்தப்படுத்தல் என்பவற் றிற்கான கொரிய வெளிநாட்டு உதவிச் செயற்திட்டத்திற்காக ரூபா 9,535,700 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டத்தின் ஊடாக விவசாய குழுக்களுக்கு வழங்குவதற்காக ரூபா 1,577,011 ஆன 27 பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் 2022 பெப்ரவரி 18 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது 11 பொருட்கள் மாத்திரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததை அவதானிக்கப்பட்டதுடன் பொருத்தமான கட்டிடமொன்றும் அதற்கு மின்சாரத்தை பெற்றுக்கொள்ளாத காரணத்தினால் குறித்த உபகரணங்கள் விளைவற்றும் குறைப்பயன்பாட்டுடனும் காணப்பட்டன. அத்துடன் இந்த செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த குறைந்த வருமானமுடைய மரவள்ளி விவசாயிகள் மற்றும் தயாரிப்பாளர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் செலவிடப்பட்ட ரூபா 1,483,846 ஆன செலவினம் நேரடியாக செயற்திட்டத்திற்கு உரித்தாக இருக்கவில்லை. | குறித்த விவசாயக் குழுக்களுக்கு பொருட்களை வழங்குவதற்காக மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வழங்கியுள்ளதாகவும் ஆய்வுகூடத்தில் குறைபாடுகளை சரிசெய்வதற்கும் நிகழ்நிலையின் கீழ் செயற்திட்டத்தின் கூட்டிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் அலுவலக செயற்பாடுகளை முறையாக நிறைவேற்றுவதற்கு தேவையான உபகரணங்கள் இச்செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளை செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

**3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாய அமைச்சின் நிதிஏற்பாடுகளின் கீழ் விவசாயத் திணைக்களத்திற்கு கிடைத்த நிதிஏற்பாடுகளை ஈடுபடுத்தி 2020 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தி பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்ட முயற்சியாளர்கள் கொத்து கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கும் அகயதாம | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை | செயற்திட்டத்தை உரிய காலப்பகுதியில் பூர்த்திசெய்ய வேண்டியதுடன் நிதிஏற்பாடுகளை உச்ச அளவில் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தின் கீழ் பொலி குகைகள் 40 நிர்மாணிப்பதற்காக இலக்கிடப்பட்டிருந்த போதும் 2021 ஒக்தோபர் 12 ஆந் திகதி வரை 16 குகை அலகுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 சனவரி 01 ஆந் திகதி வரையிலும் ஒட்டுமொத்த நிதிஏற்பாட்டிலும் 28 சதவீதம் அதாவது ரூபா 2,635,924 தொகை செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | | பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | தொழில் முயற்சியாளர் கொத்து கிராமங்களை அபிவிருத்தி மற்றும் அகயதாம செயற்திட்டத்தின் கீழ் நாற்றுக்களை நடுவதற்காக ரூபா 795,000 தொகை செலவழித்து உரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் 20 விவசாயிகள் அவற்றை பயன்படுத்தியிருக்கவில்லை. மிளகாய் விதைகள் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான குளிரூட்டியொன்றை கொள்வனவு செய்வதற்கு ரூபா 200,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் 2021 ஒக்தோபர் 12 ஆந் திகதி வரையிலும் அது கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. மிளகாய் நாற்றுக்களுக்காக திரவ பசளை இடுவதற்கு ரூபா 174,468 ஆன 500 லீற்றர் 40 நீர் தாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லைஅச்செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளிலிருந்து செயற்திட்டத்திற்கு அல்லாத வேறு செயற்பாடுகளுக்காக ரூபா 987,705 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நீர் மற்றும் பசளை தானியங்கியாக வழங்குவதற்கே பசளைத் திரவ தாங்கி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. பின்னர் விவசாயிகள் அத்தானியங்கி மென்பொருளை Dialog நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதை நிராகரித்தனர். | செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |
| (இ) | மீபிலிமான, உடரதல்ல, சீதாஎலிய மற்றும் பீதுருதாலகல விதை உருளைக் கிழங்கு உற்பத்திப ண்ணைகளின் உள்ளக வீதி முறைமை நேர் உழைப்பின் கீழ் கொங்கிரீட் இட்டு நிர்மரிப்பதற்காக ரூபா 3,959,200 ஆன மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கேள்வி கோரப்பட்டிருந்தது. எனினும் ஒவ்வொரு பண்ணையினதும் எந்த உள்ளக வீதி, எந்த அளவு மேற்கொள்ளப்படுகின்றதென்பது தொடர்பாக அண்ணளவான திட்டமொன்றும் அளவீட்டுப் பத்திரமொன்றும் (BOQ) தயாரிக்கப்படாதிருந்ததுடன் பொருட் பட்டியல் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. 2021 நவம்பர் 24 ஆந் திகதி 36 கியுப் மணல் மற்றும் 72 கியுப் மெடல் | அதிகளவில் கழுவிச்சென்று பழுதடைந்த பகுதிகளை மாத்திரம் கொங்கிரீட் இடுதல் சாதகமாகும். ஆதலால் நிர்மாணிக்கப்பட்ட வீதியின் நீளத்தை முன்னரே தீர்மானிப்பது சிரமமாகும். ஆதலால் முறைப்படி பொருட்களை வழங்கி பண்ணை முகாமையாளர்களின் முழுமையான மேற்பார்வையின் கீழ் முடியுமான வரை பெரிய பகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு இவ்வாறு அளவீட்டுப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டது. சீமெந்து மற்றும் ஏனைய பொருட்களை வழங்கி வீதிகளை | நிர்மாணங்களுக்குரிய திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் நிர்மாணம் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,587,000 தொகை வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் சிமெந்து, சதுரக் கம்பி மற்றும் பலகை கொள்வனவு செய்யப்படாமை காரணமாக இச்செயற்பாடு 2021 திசெம்பர் 02 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | |
| (ஈ) | விதை பண்ணைகளின் விரைவான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பேபுஸ்ஸ விதை உற்பத்தி பண்ணைக்காக விதைகளை காயவைத்தல் மற்றும் அறுவடை செய்யும் இயந்திரங்கள் மற்றும் கொள்வனவு, மழை மேவுகை குகை நிர்மாணம் விசிறும் நீர் வழங்கல் முறைமையொன்று நிர்மாணம் போன்ற 8 மூலதன செயற்பாடுகளுக்காக ரூபா 37.19 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடுகள் 2021 நவம்பர் 16 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான தகவல்களை உரிய பணிப்பாளர்களிடமிருந்து பதில்களைப் பெற்று சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டினுள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (உ) | அலுவலகத்தில் இடவசதிகள் போதியளவில் இல்லாமை காரணமாக கலந்துரையாடல் மண்டபமொன்றையும் பதிவேட்டறையொன்றையும் நிர்மாணிக்கும் நோக்கில் ரூபா 4,967,502 செலவு செய்து பீடைகொல்லி பதிவாளர் அலுவலகத்திற்கு அண்மையில் இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பாதத்தை பயன்படுத்தி தூண்கள் அமைக்கப்பட்டு கூரை மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது, மீளாய்வாண்டின் போது ரூபா 496,003 செலவு செய்து அக்கட்டிடத்தின் நிலமாடியில் அறிக்கை அறையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அந்த அறையும் 2021 திசெம்பர் 24 ஆந் திகதி வரையிலும் 30 சதவீதம் அளவிலான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் கட்டிடத்தின் ஏனைய வேலைகள் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டு முதல் அது விளைவற்றுக் காணப்பட்டன. | இதன் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 6 மில்லியன் நிதிஏற்பாடு கோரப்பட்ட போதும் ரூபா 500,000 தொகை மாத்திரம் கிடைத்தது. 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 7 மில்லியன் நிதிஏற்பாடு கோரப்பட்ட போதும் ரூபா 1,000,000 நிதிஏற்பாடு மாத்திரம் கிடைத்திருந்தது. | நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் ஏனைய வேலைகளை விரைவில் பூர்த்தி செய்து கட்டிடத்தை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

**3.5 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றமொன்று பெற்றுக்கொள்ளாத செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கன்னொருவ விவசாய தொழில்நுட்ப பூங்கா பிரிவினால் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 5 நிர்மாண செயற்பாடுகளுக்காக ரூபா 508,924 ஆன திரவியங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடுகள் 2021 ஒக்தோபர் 29 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த செயற்பாடுகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நிர்மாண நடவடிக்கைகளை உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ஆ) | அன்னாசி, வாழை செய்கை மற்றும் குறைப்பயன்பாட்டு பழவகை செய்கைக்கு நீரை வழங்கும் நோக்கில் துளி நீர் வழங்கல் முறையொன்று அம்பேபுஸ்ஸ விதை உற்பத்திப ண்ணையில் 2 ஏக்கர் பரப்பளவில் நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 5,166,127 தொகை செலவில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அதில் ரூபா 2,398,957 தொகை உபபாகங்களை மரக்கறி விதை உற்பத்தி துறைக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 2,767,169 ஆன உபகரணங்கள் பயன்படுத்தப் படாமல் 2021 நவம்பர் 16 ஆந் திகதி வரையிலும் குறைப்பயன்பாட்டில் காணப்பட்டன. | துளி நீர் வழங்கல் முறைமை மரக்கறி விதை உற்பத்தி துறைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்த வேண்டும். |

**3.6 பெறுகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கன்னொருவ விவசாய தொழில்நுட்ப பூங்கா பிரிவு ரூபா 653,072 பெறுமதியான இரண்டு காவலாளிகள் கூடங்கள் நிர்மாணிப்பதற்காக பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இரண்டு காவலாளிகள் கூடங்களுக்கும் பூச்சு பூசுதல், உட்கூரை அடித்தல், 20 வொட் மின்குமிழ் பொருத்துவதற்காக ரூபா 116,114 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு பொருட்கள் அனைத்தும் களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த போதும் 2021 நவம்பர் 26 ஆந் திகதி வரையிலும் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 06 பிளைவுட் மிகை நூதனசாலையின் காட்சிப்பொருட்களை வைப்பதற்கும் ஆதாரமாக தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. பூச்சு பூசுதல் ஆளிகை பொருத்துதல் என்பவற்றை விரைவில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி குறித்த செயற்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும். |

அவ்வாறே ரூபா 25,470 பெறுமதியான 1/2 பிளய் வுட் பலகைகள் 12 கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்த போதும் அவையும் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்கத்தின் காணி தொடர்பான செயற் கோவையின் 224 ஆவது பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் திணைக்களங்களிற்கு சொந்தமான காணிப் பகுதியை அளவிடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு முறையான பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், விவசாயத் திணைக்களத்திற்குரிய 10 நிறுவனங்களின் 3901.82 ஹெக்டேயர் அளவிலான மொத்தக் காணியில் 2935.35 ஹெக்டேயர் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | இது பல நிறுவனங்களுடன் கலந்துரையாடி கையேற்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது. | திணைக்களத்தின் உடமமையான சகல காணிகளும் விடுவிக்கப்பட்டு உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.8 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 மற்றும் 612 ஆம் அதிகாரத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 05 நிறுவனங்களின் பிணை வைக்க வேண்டிய 28 உத்தியோகத்தர்களால் 2021 திசெம்பர 31 ஆந் திகதி வரையிலும் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்காத உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களால் பிணை வைக்க வேண்டும். |

## 3.9 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் சீதாஎலிய பண்ணையின் களஞ்சியத்தில் மேற்கொண்ட சோதனைப் இடம்பெற்ற பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 2,278,890 தொகையான மோசடிக்குரிய 2021 மார்ச் 24 ஆந் திகதி வரை ரூபா 1,759,167 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 519,723 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்தோடு இப்பண மோசடிக்குரிய ஆரம்ப புலனாய்வு 2021 திசெம்பர் 01 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனையொன்று மேற்கொண்டு குறித்த பத்தை அறவீடு செய்தல் வேண்டும். | நட்டத்தை அறவிடும் செயற்பாடுகள் செய்யப்பட வேண்டியதுடன் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நட்டங்கள் மற்றம் விட்டுவிடுதல் தொடர்பான கூற்று (குறிப்பு i) இன் பிரகாரம் மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு உள்ள நட்டங்கள் மற்றும் சேதங்கள் காணப்பட்டன. 436 சம்பவங்களுக்குரிய ரூபா 101,404,491 பெறுமதியான அந் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 104(4) செயற்பாடுகள் இறுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பரிசோதனைகள் 239 உம் பரிசோதனை குழு நியமிக்கப்பட்டு இறுதி அறிக்கை கிடைக்காத 46 பரிசோதனைகளும் கணிப்பீட்டு சபை நியமிக்கப்பட்டுள்ள 29 கோவைகள் காணப்படுகின்றன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.10 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்காமை

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணைகளுக்கு 2022 மே 31 ஆந் திகதி வரையிலம் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு விசாரணை தொடர்பான விபரம | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சீதாஎலிய விதை உருளைக் கிழங்கு களஞ்சியத்தின் நிதி மற்றும் செயலாற்றல் கணக்காய்வு – 2021 தொடர்பு :- KDA/B/AD/2/21/B/47/2022.03.09 | குறித்த பிரிவிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் தகவல் கிடைத்தவுடன் பதில் சமர்ப்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய காலப்பகுதியில் பதில் அளிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | விவசாயத் திணைக்களத்தின் வாகனங்கள் தொடர்பான பரிசோதனை தொடர்பு :- KDA/B/AD/2/21/T/69/2022.04.08 | தகவல் கிடைத்தவுடன் பதில் சமர்ப்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய காலப்பகுதியில் பதில் அளிக்கப்பட வேண்டும். |

### 3.11 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரஹங்கல விதை உற்பத்திப ண்ணையில் இடவசதிகள் இல்லாமை களஞ்சியங்களுக்கு இடையே போதியளவு இடைவெளி இல்லமை காரணமாக களஞ்சியத்திற்கு இலகு உட்செல்ல முடியாமை, களஞ்சிய சுத்திகரிப்பு செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ள முடியாமை ஆயுள் குறைவடைவதற்கு முன்னர் இருப்புக்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்காமை காரணமாக 2020 ஆகஸ்ட் 18 மற்றும் 20 ஆம் திகதிகளில் மொத்தம் ரூபா 780,420 பெறுமதியான 3,926 கிலோ கிராம் சோளம் மற்றும் ஏனைய தானிய விதைகள் கிருமி சேதங்கள் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்தது | இடவசதிகள் இல்லாததன் காரணமாக தானிய இருப்புக்கள் ஓரளவு அதிகரித்தமையால் இந்நிலைமை உருவாகியிருந்தது. தற்போது புதிய களஞ்சிய நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருவதால் நிர்மாண வேலைகளின் பின்னர் இச்சிக்கல்களை தீர்வுசெய்து கொள்ள முடியுமென அறிக்கையிடப்பட்டிருந்தது. | முறையான இருப்பு முகாமைத்துவ வேலைத்திட்டமொன்று பேணிச்செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | சீதாஎலிய விதை உருளைக்கிழங்கு களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 1,272,800 ஆன 1591 கிலோ கிராம் கலப்பு சோள விதைகள் 10 மாத காலப்பகுதியில் களஞ்சியங்களில் வைக்கப்பட்ட காரணத்தினால் விளைதிறன் குறைவடைவதால் நிராகரிக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு விதை வகைகளுடன் போட்டி காரணமாக இப்புதிய விதை வகை விவசாயிகளுக்கு இடையே விவசாயிகளுக்கு இடையே பிரசித்தப்படுத்துவதற்கு சிக்கல் காரணமாக குறைவான விற்பனையால் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | உற்பத்தி விதைகள் தேவைப்படும் பிரிவுகளுக்கு தாமதமின்றி அனுப்பி வைக்கப்பட வேண்டும் |
| (இ) | பண்ணை முற்பணக் கணக்கிற்குரிய 01 ஆண்டு முதல் 08 ஆண்டுகள் வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்த ரூபா 14,399,028 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் நிதிப்பிரமாணம் 175(2) இன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் தாமதமின்றி இக்கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கடன்கள் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | விவசாய அமைச்சினால் விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 12,175,459 ஆன நிதிஏற்பாடு கடன் மீதியொன்றாக பண்ணை முற்பணக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டு காணப்பட்ட போதும் அது மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | விவசாய அமைச்சினால் எமக்கு வழங்கப்பட்டுள்ள நிதிஏற்பாடு எனவும் கடன் மீதியொன்றல்ல என அறிவிக்கப்பட்டிருந்தது. | பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது இம்மீதி பண்ணை முற்பணக் கணக்கிற்கு உரியதால் தீர்வுசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பண்ணை முற்பணக் கணக்கிற்குரிய 27 நிறுவனங்களின் சொத்துக்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 13 நிறுவனங்களின் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிறுவனத்திற்குச் சொந்தமாக காணப்படும் சொத்துக்களின் சரியான பெறுமதியை இனங்காண முடியாதிருப்பதுடன் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு சரியானதல்ல எனவும் அவதானிக்கப்பட்டது. | நடப்பாண்டில் இந்நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | உரிய மீள்மதிப்பீட்டினை மேற்கொண்டு சொத்துக்களின் சரியான பெறுமதி பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 மற்றும் 6 ஆம் பந்திகளின் பிரகாரம் மரணித்த, ஓய்வுபெற்ற, சேவைகாலம் போதியளவில் இல்லாமையால் ஓய்வூதியமின்றி ஓய்வுபெற்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட, வெளிநாடு சென்ற, வேலையை விட்டுச் சென்ற மற்றும் மத்திய மயப்படுத்தப்பட்டதன் கீழ் வெவ்வேறு பிரிவுகளின் மூலம் இட மாற்றப்பட்டிருந்த 127 உத்தியோகத்தர்களுக்குரிய மொத்தம் ரூபா 6,772,208 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை கடன் மீதிகள் அறவிப்பட வேண்டும். |
| (எ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 118 ஆம் இலக்கத்தின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனக் கடன்களைப் பெற்றவர் கடன் தவணைகளை செலுத்தவில்லை என்றால், சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் தொடர்புடைய சொத்தை ஏலத்தில் விற்று நிலுவை கடன்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும். திணைக்களத்தில் பணியாற்றிய 07 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு உரிய ரூபா 681,033 கூட்டுத்தொகையான கடன் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சில நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்காக தனங்களை ஏலத்தில் விற்பனை செய்தல், சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த நிலுவைக் கடனை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரிய 2030 ஆம் ஆண்டளவில் விவசாய திணைக்களத்தினால் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கும் மற்றும் அடைந்தகொள்ள வேண்டிய நோக்கங்களின் செயன்முன்னேற்றம் தொடர்பான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இந்த நோக்கங்களுக்குரியதான குறிகாட்டிகளின் தற்போதய செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்காக அடிப்படை தரவுகளும் (Base Line Data) சேகரிக்கப்பட்டி க்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான திட்டங்கள் மற்றும் இலக்குகளை தயாரித்தல் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டை அடிப்படையாக கொண்டு திணைக்களத்தின் உற்பத்தி திட்டத்திற்கு அமைய 2025 ஆம் ஆண்டு வரை அடைந்துகொள்ள வேண்டிய திணைக்களத்தின் இலக்குகள் தற்போது இனங்காணப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. | ஒவ்வொரு நோக்கங்கள் மற்றும் இலக்குகளின் செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்காக அளவீட்டு முறைமையொன்றும் அடிப்படை தரவுகளை சேகரிப்பதற்கு நடவடிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பீடைகொல்லி பதிவாளர் அலுவலகத்தின் பீடைகொல்லி கட்டுப்பாட்டு பதிவாளர் பதவி மற்றும் உதவி விவசாய பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) பதவிகள் 07 வெற்றிடங்களாக காணப்பட்டன | திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பிற்காக வெவ்வேறாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. அதன் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முக பரீட்சைகள் சித்தியடைந்ததன் பின்னர் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கும் அதன் பின்னர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக | விரைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் பதவியணியினர் வெற்றிடங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | பற்றாக்குறை |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 1050 | 414 | 636 |
| மூன்றாம் நிலை | 208 | 72 | 136 |
| இரண்டாம் நிலை | 3638 | 2945 | 693 |
| ஆரம்ப நிலை | 6150 | 4778 | 1372 |
| மொத்தம் | 11046 | 8209 | 2837 |
| | ===== | ===== | ==== |

சில பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சில பதவிகளை ஆட்சேர்ப்பு தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 3/2022 இன் பிரகாரம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

விரைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.